பொதுச் சுற்று நிருபம் இல.....02-93/2014

எனது இல,FHB/AH/LET/2014
சுகாதார அமைச்சு
“சுவசிரிபாய”
385, பத்தேகம விமலவன்ச
தேரோ மாவத்தை
கொழும்பு - 10
2014- 06-19

மாகாண சுகாதார செயலாளர்கள்

மாகாண சுகாதாரப் பணிப்பாளர்கள்

பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர்கள்

பணிப்பாளர்கள்/ வைத்தியசாலைப் பொறுப்பதிகாரிகள்

விசேட நிகழ்ச்சித் திட்ட பணிப்பாளர்கள்

பணிப்பாளர், தேசிய சுகாதார விஞ்ஞான நிறுவனம்

தாய் சேய் நல வைத்திய அதிகாரிகள்

பிரதான வைத்திய அதிகாரி, நகர சபை, கொழும்பு

சுகாதார வைத்திய அதிகாரிகள்

## “இளைஞர் சுகாதாரம்” சுகாதார அமைச்சிற்குட்பட்ட பொறுப்பான அமைப்பு

10-19 வயதிற்கிடைப்பட்டோரை கட்டிளமைப் பருவத்தினர் எனவும். 15-24 வயதிற்கிடைப்பட்டோரை இளைஞர் எனவும் அழைக்கிறோம். வரும் காலங்களில் இலங்கையின் பொருளாதார அடைவு நிலையினை வடிவமைக்கும் திறன்வாய்ந்த கட்டிளமைப் பருவத்தினர் 3.7 மில்லியனும் 3.2 மில்லியன் இளைஞரும் இருப்பதனை இலங்கையின் சனத்தொகை மதிப்பீடு சுட்டிக்காட்டுகின்றது.

இளைஞர் மற்றும் கட்டிளமைப் பருவத்தினருக்கான நிகழ்ச்சித் திட்டங்களை சுகாதார அமைச்சினுள் பல்வேறு பங்காளர்கள் செயற்படுத்துவதனால் வளங்களைச் சரியாகப் பயன்படுத்த முடியாமை ஒரே மாதிரியான நிகழ்வுகள் பலதடவைள் நிறைவேற்றப்படும் நிலை அரச சுகாதார அதிகாரிகள் சுகாதார மல்லாத வேறு அரச அதிகாரிகளுக்கிடையே பெரும் குழப்ப நிலை நிலவுகிறது. எனவே இளைஞர் மற்றும் கட்டிளமைப் பருவத்தினருக்கான சுகாதார நிகழ்ச்சித்திட்டங்களை திறமையாக நடத்தவும் குழப்பமற்ற நிலையில் செயற் படுத்தவும் தேசிய மட்டத்தில் எல்லாவற்றிற்கும் பொறுப்பு வாய்ந்த மையம் ஒன்றினை இனம்காண்பது இன்றியமையாத தொன்றாகும். கட்டிளமைப் பருவ சுகாதாரம், இளைஞர் சுகாதாரம் எனும் இரு பொறுப்புகளையும் ஒன்றிணைப்பதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

குடும்ப சுகாதாரப் பணியகமானது குடும்ப நலம் மற்றும் சிறுவர் நலம் என்பவற்றிற்குரிய மையமாகப் பணியாற்றி (0-18 வயதுவரை) 1990 ஆண்டிலிருந்து கட்டிளமைப் பருவத்தினருக்கான சுகாதார நடவடிக்கைகளை செயல்படுத்தி வந்துள்ளது. நிகழ்ச்சித் திட்டத்திற்கான தேவையையும் மேற்குறிப்பிட்ட காரணிகளையும் கருத்திற் கொள்ளும்போது கட்டிளமைப் பருவத்தினர் மற்றும் இளைஞருக்கான நிகழ்ச்சித்திட்டங்களுக்கான மிகப் பொருத்தமான வலிமையான நிறுவனமாக

குடும்ப சுகாதார பணியகம் கருதப்படலாம் ஏனவே கட்டிளமைப் பருவத்தினர் மற்றும் இளைஞர் சுகாதார நிகழ்ச்சித் திட்டங்களுக்கான தேசிய மட்ட குவிமையமாக குடும்ப சுகாதாரப் பணியகத்தினை அமைச்சிற்குள் இனம் கண்டுள்ளதாகத் தீர்மானித்துள்ளது.

இத்தகைய அபிவிருத்தியுடன் குடும்ப சுகாதாரப் பணியகத்தின் விஸ்தீரணம் மேலும் விரிவாக்கப்பட்டு வாழ்க்கைக் கால அணுகு முறையைப் பயன்படுத்தி குடும்ப சுகாதார முன்னேற்றத்தை வாழ்க்கை வட்டத்திற்கூடாக செயற்படுத்த பாடசாலையை விட்டு வெளியேறிய கட்டிளமைப் பருவத்தினரையும் உள்ளடக்கியுள்ளது. இதன் கொள்கைகளும் தந்திரோபாயங்களும் இவ்விரிவாக்கத்தினை உள்ளடக்கும்படி மாற்றியமைக்கப்படும்.

நம் நாட்டிலுள்ள இளைஞருக்கான நல்ல தருணமான சேவையை வழங்குவதற்காக சுகாதார அமைச்சினுள் பொருத்தமான அனைத்து பணிமனைகளும் பங்காளர்களாக கொள்ளப்படுவர்.

................................

பணிப்பாளர், பொதுச் சுகாதார சேவைகள்,
சுகாதார அமைச்சு.

**Dr. P. G. Mahipala**
Director General Health Service
Ministry of Health
385, "Suwasiripaya"
Rev. Baddegama Wimalawansa Thero Mawatha,
Colombo 10.

பிரதிகள் :

- செயலாளர், கல்வி அமைச்சு
- செயலாளர், இளைஞர் விவகார அமைச்சு மற்றும் திறன் விருத்தி
- மேலதிக செயலாளர், மருத்துவ சேவைகள், சுகாதார அமைச்சு
- தலைவர் - தேசிய இளைஞர் சேவைகள் அமைப்பு
- DDG PHS-1-11 சுகாதார அமைச்சு
- DDG மருத்துவ சேவைகள், சுகாதார அமைச்சு
- DDG திட்டமிடல், சுகாதார அமைச்சு
- DDG ET & R, சுகாதார அமைச்சு
- பணிப்பாளர் சுகாதாரம் மற்றும் போஷனை - கல்வி அமைச்சு
- DDG ஆய்வுகூட சேவைகள், சுகாதார அமைச்சு
- பணிப்பாளர் - இளைஞர் அபிவிருத்தி, இளைஞர் விவகார அமைச்சு மற்றும் திறன் விருத்தி
- இலங்கைப் பிரதிநிதிகள்- WHO/UNFPA/UNICEF/உலகவங்கி/உலக உணவு நிகழ்ச்சித் திட்டம்